FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

DSPC 8213030

1. District : திண்டுக்கல் மாவட்டம் | PS: மகளிர் காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 02/2026 முத.அ. எண் | Date: 18.03.2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. | Sections பிரிவுகள்: 7(a) of P.C. Act 1988 - as amended in 2018.

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 12.03.2026 - 11.30 hrs 17.03.2026 - 12.00 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.03.2026 | Time : நேரம் at 09.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திண்டுக்கல் மாவட்ட சமூகவள அலுவலகம் பள்ளபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். 35 கி.மீ தென்மேற்கு திசையில்

Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி —

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. குமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பரமசிவம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2026 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 5/94, அதங்கத்துவழி, பள்ளபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. கீதா, திறன் மேம்பாட்டு அலுவலர், பள்ளபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.3.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

18/03/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.03.2026 - 12.20 hrs.

Name: பெயர் ப. பழனிச்சாமி
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
மாடல் காவல் நிலையம் கன்னியாகுமரி மாவட்டம்
திங்கள்நகர்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:2/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 18.03.2026-ம் தேதி காலை சுமார் 09.45 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, பள்ளபட்டி, தெற்கு தெரு, கதவு எண்.5/94ல் வசித்து வரும் திரு.பரமசாமி மகன் திரு.P.குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 10.45 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். P.குமார், வயது 46/2026, த/பெ.பரமசாமி, கதவு எண்.5/94, தெற்கு தெரு, பள்ளபட்டி, நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம், பெறுநர். காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். மேலும் கோழிக் கறிக்கடையும் பள்ளபட்டியில் நடத்தி வருகிறேன். எனது தந்தை திரு.பரமசிவம் அவர்களுக்கு சொந்தமாக பள்ளபட்டி கிராம சர்வே எண்கள். 287/1, 287/3, 287/4ல் சுமார் 5 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. அதில் சுமார் 4.43 ஏக்கர் நிலத்தை எனது தந்தை கடந்த 1 வருடத்திற்கு முன்பு வத்தலக்குண்டினை சேர்ந்த தினேஷ்குமார் என்பவருக்கு விற்றுவிட்டார். மேற்படி விற்ற நிலத்தினை தவிர்த்து சுமார் 55 செண்ட அளவுள்ள நிலமானது பள்ளபட்டி கிராம சர்வே எண். 287/1A1Bல் இருந்தது. அதனை எனது உடன்பிறந்த சகோதரியான திருமதி.ராதா அவர்களுக்கு நானும் எனது சகோதரர்கள் இருவர் மற்றும் எனது தந்தை பரமசாமி அவர்களும் சேர்ந்து கூட்டாக தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 24.03.2025 அன்று பதிவு செய்து கொடுத்துவிட்டோம். அந்த ஆவணமானது நிலக்கோட்டை சார்பதிவாளர் அலுவலத்தில் ஆவண எண். 5667/2025 ஆக பதிவு செய்யப்பட்டது. பின்னர் எனது சகோதரி திருமதி.ராதா அவர்கள் வெளியூரில் வசித்து வருவதால் மேற்படி நிலத்தை சரிவர பராமரிக்க இயலாமல் இருந்து வந்தார். எனவே எனது பெயருக்கு மீண்டும் தான செட்டில்மெண்ட் மூலமாக 55 செண்ட நிலத்தை எனக்கே கொடுத்துவிட்டார். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணமானது நிலக்கோட்டை சார்பதிவாளர் ஆவண எண். 7080/2025 ஆக 10.10.2025 அன்று பதிவு செய்யப்பட்டது. அதன் பின்பு அந்த நிலத்தில் நானே விவசாயம் செய்து வருகிறேன்.

இந்நிலையில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் நிலக்கோட்டை EB அலுவலகத்திலிருந்து எனது தந்தை திரு.பரமசாமி அவர்களுக்கு தொடர்பு கொண்டு பள்ளபட்டி கிராம சர்வே எண். 287/4ல் உள்ள விவசாய கிணற்றிற்கு 5 HP விவசாய மின் இணைப்பு வேண்டி கடந்த 2010ல் பதிவு செய்திருந்தாகவும், அதன் பதிவு வரிசை எண். 209/10-11 நாள்.06.12.2010 எனவும், தற்போது மின் இணைப்பு வந்துள்ளதாகவும் தகவல் தெரிவித்துள்ளனர். மேலும் தற்போது நிலமானது திரு.பரமசாமி அவர்கள் பெயரில் இல்லாமல் அவரது மகன் திரு.குமார் ஆகிய என் பெயரில் உள்ளதால் வந்திருக்கும் விவசாய மின் இணைப்பை என் பெயருக்கு வழங்கிட ஆட்சேபமில்லை என்று கடிதம் கொடுக்குமாறு எனது தந்தையிடம் தகவல் தெரிவித்துள்ளனர். அதன் பேரில் நானும் எனது தந்தையும் அன்றே நிலக்கோட்டை EB அலுவலகத்திற்கு சென்றோம். எனது தந்தை ஆட்சேபமில்லை என்ற கடிதத்தை எழுதிக் கொடுத்தார். அதன் பின்பு அந்த அலுவலகத்திலிருந்த அதிகாரி சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து வருவாய் ஆவணங்கள், பட்டா, பத்திரம், வரைபடம், அடங்கல் ஆகியவற்றோடு நிலத்தின் உரிமையாளர் என்பதற்கான சான்றிதழையும் பெற்றுக்கொண்டு அலுவலத்தில் வந்து தருமாறும் தெரிவித்தனர். அதற்கு நாங்கள் சர்வே எண். 287/4ல் அமைக்கப்பட்டிருந்த ஆழ்துளை கிணறு உள்ள பகுதியானது வத்தலக்குண்டை சேர்ந்த தினேஷ்குமார் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்ட பகுதிக்குள் உள்ளது என்று கூறினர். அதற்கு நிலக்கோட்டை மின்வாரிய AE அவர்கள் தற்போது குமார் பெயரில் உள்ள நிலத்தின் பகுதிக்குள் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து கொள்ளுங்கள். நாங்கள் அதனை ஆய்வு செய்து சர்வீஸ் வழங்குகிறோம். அப்போதுதான் அரசால் வழங்கப்பட்ட இலவச மின் இணைப்பை நீங்கள் பயன்படுத்த முடியும் என கூறினர். அதன் பேரில் நானும் எனது தந்தையும் 10.03.2026 காலை சுமார் 11.00 மணியளவில் பள்ளபட்டி VAO அலுவலத்திற்கு சென்றோம். அங்கு VAO திருமதி.சத்யா அவர்கள் அலுவலகத்தில் இல்லை. அலுவலகத்திலிருந்த ஒரு பெண்ணிடம் கேட்டதற்கு VAO அவர்கள் திண்டுக்கல் சென்றுள்ளதாகவும், நிலம் தொடர்பான விபரங்களை அவரிடமே கொடுத்துச் செல்லுமாரும், VAO வந்த பின்னர் சான்றிதழ் வாங்கி கொள்ளலாம் என்றும் தெரிவித்து நாங்கள் கொடுத்த விபரங்களை பூர்த்தி செய்து வைப்பதற்காக ரூ.500 கேட்டு வாங்கிக்கொண்டார். பின்னர் அன்று சாயங்காலம் VAO அவர்களை அலுவலகத்தில் வந்த சந்திக்குமாறு தெரிவித்து அனுப்பிவிட்டார். நாங்களும் வந்துவிட்டோம். அதன் பின்னர் எனக்கு வேலை இருந்ததால் நான் சாயங்காலமோ,

மறுநாளோ செல்லவில்லை. எனவே 12.03.2026 காலை சுமார் 11.30 மணிக்கு நான் பள்ளபட்டி VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி.சத்யா அவர்களை சந்தித்து சான்றிதழ் தொடர்பாக கேட்பதற்கு சென்றேன். அலுவலகத்தில் VAO திருமதி.சத்யா அவர்கள் இல்லை. அப்போது அலுவலகத்தில் இருந்த கிராம உதவியாளர் திரு.கணேசன் அவர்கள் என்னிடம் VAO ரூ.5,000/-ம் கேட்கச் சொல்லியுள்ளார்கள் என்றும் கொடுத்தால்தான் சான்றிதழ் கிடைக்கும் என்று கூறியதாகவும் தெரிவித்தார். அதற்கு நான் அவ்வளவு பணம் கிடையாது ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு திரு.கணேசன் அவர்கள் ரூ.5,000/-த்தை நானா கொண்டு போகப்போறேன், VAO அவர்கள்தான் கேட்டார். வேண்டுமென்றால் VAO திருமதி.சத்யா அவர்களை பார்த்து பேசிக்கொள்ளுங்கள் என்று கூறினார். நானும் VAO வை பார்த்து பேசிக்கொள்ளலாம் என்று நினைத்து திரும்ப வந்துவிட்டேன். அதன்பின்பு எனக்கு வேலையாக இருந்ததால் செல்லவில்லை. எனவே நேற்று 17.03.2026 சுமார் 12.00 மணிக்கு பள்ளபட்டி VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி.சத்யா அவர்களை சந்தித்து சான்றிதழ் தொடர்பாக கேட்டேன். அதற்கு VAO அவர்கள் ஏன் கடந்த 4 நாட்களாக வரவில்லை, நான் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம் என்றார். அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை, ரூ.3,000/-ம் கொடுத்துவிடவா என்றேன். அதற்கு அவர் அவ்வளவு எல்லாம் குறைக்க முடியாது என்றார். பின்னர் ரூ.1,000/-ம் குறைத்து கொண்டு ரூ.4,000/-த்தை லஞ்சமாக திரு.கணேசன் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள் சான்றிதழ் தயார் செய்து விடுகின்றேன், அதனை சாயங்காலம் கணேசன் அவர்களிடம் வாங்கிக்கொள்ளலாம் என்று கூறினார். நானும் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். எனது சொந்த நிலத்திற்கான சான்றிதழ் தருவதற்காக ரூ.4,000/-ம் லஞ்சமாக கேட்கும் பள்ளபட்டி கிராம VAO திருமதி.சத்யா அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இந்த புகாருடன் எனது சகோதரி திருமதி.ராதா அவர்கள் பள்ளபட்டி கிராம சர்வே எண்.287/1A1Bல் உள்ள 55 செண்ட புன்செய் நிலத்தினை எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் கொடுத்த ஆவண எண். 7080/2025 நாள். 10.12.2025ன் நகல் மற்றும் எனது தந்தை திரு.பரமசாமி அவர்கள் பெயரில் பதிவு செய்த விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு வரிசை எண்/நாள். 209/10-11, நாள்.06.12.2010-ன் ஒப்புதல் அட்டை நகலை இணைத்துள்ளேன். மேலும் பள்ளபட்டி கிராம VAO திருமதி.சத்யா அவர்கள் லஞ்சமாக

கேட்ட பணம் ரூ.4,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.குமார், 18.03.2026).

Sir, Received the complaint on 18.03.2026 at 09.45hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.02/2026, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 10.45 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 18.03.2026).

Original FIR along with Computer Typed complaint of Tr.P.Kumar, S/o.Paramasamy, Door No.5/94, South Street, Pallapatti, Nilakottai Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

18/03/26

(P.Palanisamy),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul